# கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,

# அருப்புக்கோட்டை.

# அசல் வழக்கு எண். 230/2012

**பி.சா.1** நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு, குறுக்கு விசாரணை - நாள் 23-09-2025.

பெயர் = பாஸ்கரன்

**பி.சா.1** நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி வாதி தரப்பில் கு.வி.-

(1) அசல் வழக்கில் பிராது சொத்து விவரத்தில் வாதிகள் குறிப்பிட்டுள்ள சொத்து விவரம் சரியாக உள்ளதா என்றால் சரியாக உள்ளது. தாவா சொத்தின் சர்வே எண். 418/19 என்பதில் ஆட்சேபணை இல்லை என்றால் சர்வே எண்ணில் ஆட்சேபணை இல்லை , ஆனால் மேற்படி சர்வே எண்ணை பாதை என்று வகைபாடு செய்யப்பட்டுள்ளதை ஆட்சேபிக்கிறேன். பாதை என்று வகைப்பாடு செய்யப்பட்டது எனக்கு எப்போது தெரியவந்தது என்றால் 2012 ம் வருடம் தெரியவந்தது. தாவா சொத்து உள்ள வாகைகுளம் கிராமம் என்னுடைய சொந்த ஊர் இல்லை என்றும், எனது மனைவியின் ஊர் என்றால் சரிதான். என்னுடைய மனைவிக்கு வயது என்னவென்றால் 56 வயது ஆகும்.

(2) என்னுடைய நிருபண வாக்குமூலத்தில் எனது மனைவிக்கு இடுப்பு கிண்ண மூட்டில் முறிவு ஏற்பட்டு அதற்கு அருப்புக்கோட்டையில் உள்ள அமர் மருத்துவமனையில் அறுவைச் சிகிச்சை செய்து வீட்டில் உள்ளார் என்று குறிப்பிட்டுள்ள நிலையில் அதற்கு ஆதரவாக ஆவணம் எதையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. எனது மனைவிக்கு எப்போது அறுவை சிகிச்சை செய்யப்பட்டது என்றால் 2016 ம் வருடம் செய்யப்பட்டது. மேற்படி அறுவை சிகிச்சை செய்து 9 வருடங்கள் ஆகிவிட்டது என்றால் சரிதான். தற்போது நன்றாக நடக்கும் நிலைமையில் தான் உள்ளார் என்றால் இல்லை, சரியாக நடக்கமுடியாது.

(3) திருமணமாகி எந்த வருடம் வாகைகுளத்திற்கு வந்தோம் என்றால் 1987 ம் வருடம் வந்தோம். 1987 க்கு முன்பு நடந்த விசயங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு வடக்கே தெற்கே உள்ள இடங்களை எனது மனைவி கிரையம் வாங்கி உள்ளார் என்றால் சரிதான். கிரையம் வாங்கிய பி.சா.ஆ.1 மற்றும் பி.சா.ஆ.2 பத்திரங்களை பற்றி எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். திருமணத்திற்கு 10 வருடங்களுக்கு முன்பு ஏற்பட்ட கிரையத்தை பற்றி எப்படி எனக்கு நேரடியாக தெரியும் என்றால் திருமணமாகிய வருடத்திலிருந்து அனுபவம் செய்து வருவதால் எனக்கு தெரியும். திருமணத்திற்கு 10 வருடங்களுக்கு முன்பு நான் தாவா சொத்தை அனுபவம் செய்யவில்லை என்றால் செய்யவில்லை.

(4) எனது மனைவி வாங்கிய கிரையப்பத்திரத்தில் தாவா சொத்து அடங்கியுள்ளதா என்பதை எனது மனைவியை கேட்டால் தான் தெரியும் என்பதை எனது மனைவியை கேட்டால் தெரியும். வாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்கிற்கு எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்கான விவரங்களை வழக்கறிஞரிடம் கூறியது நானா அல்லது எனது மனைவியா என்றால் நான்தான். நீதிமன்ற ஆணையர் தாவா இடத்தை பார்வையிட வரும்போது தாவா இடத்தில் நான் தான் இருந்தேன் என்றால் சரிதான். எனது மனைவி நீதிமன்ற ஆணையர் தாவா இடத்தை பார்வையிட வரும்போது இல்லை என்றால் சரிதான். தாவா இடத்தை அரசாங்கத்தால் பாதை என்று 1991 ம் வருடம் வகைப்பாடு செய்யப்பட்டது என்றால் சரிதான்.

(5) 1991 ம் வருடம் நான் வாகைக்குளம் கிராமத்தில் தான் இருந்தேனா என்றால் இருந்தேன். மேற்படி சங்கதிகளை எனக்கு அப்பொழுதே தெரிந்திருக்கும் என்றால் சர்வே செய்யும்போது அறிவிப்பு எங்களுக்கு அனுப்பவில்லை. எனது மாமனார் பெயரிலோ அல்லது எனது மனைவி பெயரிலோ அறிவிப்பு அனுப்பப்பட்ட விவரம் எனக்கு தெரியாது என்றால் இருவரும் அறிவிப்பு அனுப்பவில்லை என்று தான் கூறினார்கள். எனது மாமனார் தற்போது உயிருடன் இருக்கிறாரா என்றால் இல்லை, இறந்துவிட்டார். 2012 ம் வருடம் தாவா சொத்து தெருவாக வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்று எனக்கு தெரிந்த பின்பு, தாவாசொத்து எனக்கு பாத்தியம் என்று நீதிமன்ற நடவடிக்கை எதுவும் எடுத்துள்ளீர்களா என்றால் 2012 ல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு பின்பு நான் எவ்வாறு நீதிமன்ற நடவடிக்கை எடுக்கமுடியும் என்கிறார் சாட்சி. வாதிகள் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கில் தாவா சொத்து எனக்கு

பாத்தியம் என்று எதிர்கோரிக்கை வழக்கு எதுவும் தாக்கல் செய்துள்ளரா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

(6) தாவா சொத்தில் எனக்கு பாத்தியம் இல்லை என்பதால் தான் நான் தாவா வழக்கை தவிர வேறு எந்த சட்டநடவடிக்கைகளும் எடுக்கவில்லை என்று சொன்னால் இது சம்பந்தமாக ஏற்கனவே வட்டாட்சியர், கோட்டாட்சியர் ஆகியோர்களை அணுகினேன், நீதிமன்றத்தில் வழக்கு நடப்பதால் அவர்களால் எதுவும் செய்யஇயலாது என்று சொல்லிவிட்டனர் என்கிறார் சாட்சி. வருவாய் துறையை நான் அணுகினேன் என்பதற்கு ஆதரவாக நீதிமன்றத்தில் ஆவணம் எதையும் என்னால் தாக்கல் செய்யமுடியுமா என்றால் முடியாது. எனது மனைவி பி.சா.ஆ.1 மற்றும் பி.சா.ஆ.2 ஆவணம் மூலமாக தான் தாவா சொத்திற்கு வடக்கே மற்றும் தெற்கே உள்ள சொத்துக்களை கிரையம் வாங்கியதாக நான் சொல்கிறேன் என்றால் சரிதான். மேற்படி கிரைய பத்திரத்தில் 8 லக்க சொத்துக்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

(7) தாவா வழக்கில் உள்ள சொத்து பி.சா.ஆ.2 ஆவணத்தில் எத்தனையாவது சொத்தாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று எனது எதிர்வழக்குரையிலோ அல்லது நிரூபண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் அதுபற்றி எனக்குதெரியாது. மேற்படி கிரைய பத்திரத்தில் தாவா சொத்து எத்தனையாவது லக்க சொத்தாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், 2 வது லக்கசொத்தாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி 2 வது லக்க சொத்து எங்களது பத்திரப்படி, கிழமேல் 72 அடியும், தென்வடல் 26 அடியும் விஸ்தீரணம் உள்ள சொத்து என்றால் சரிதான். மேற்படி 2 வது லக்க சொத்து பி.சா.ஆ.1 மற்றும் பி.சா.ஆ.2 பத்திரத்தில் நான்குமாலில், நடைபாதைக்கும் மேற்கே என்று தான் 2 வது லக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், அழகர்சாமி சேர்வை கிரையவீட்டுக்கும் கிழமேல் எங்கள் நடைபாதைக்கும் மேற்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

(8) மேற்படி பத்திரத்தில் தாவா சொத்து 2 வது லக்க சொத்தை தவிர வேறு எந்த லக்க சொத்திலும் கட்டுப்படவில்லை என்றால் 41 அடி நீளம் 1 வது லக்க சொத்தில் கட்டுப்பட்டுள்ளது. மேற்படி பத்திரத்தில் 1 வது லக்க சொத்திற்கு தெற்கு மால் இதன் 3 வது லக்கத்திற்கும், கிழமேல் எங்களுக்கும், பொது பாத்தியமான எங்கள் கிழமேல் நடைபாதைக்கும் வடக்கு என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான்.

மேற்படி பத்திரத்தில் உள்ள 3 வது லக்கசொத்தில் தாவா சொத்து கட்டுப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி பத்திரத்தில் 3 வது லக்க சொத்திற்கு கிழக்கு மால் குறிப்பிடும் போது, ராமகிருஷ்ணபிள்ளை வீட்டிற்கும் மேல்கண்ட எங்கள் கிழமேல் நடைபாதைக்கும் மேற்கு என்று தான் குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பி.சா.ஆ.2 பத்திரத்தில் கண்ட சொத்துக்களை எனது மனைவிக்காக அவரது தகப்பனாரும் அவருடைய சகோதர தமையனாரும் கிரையம் வாங்கினார்கள் என்றால் சரிதான். மேற்படி பி.சா.ஆ.2 பத்திரத்தில் உள்ள சொத்துக்களை முத்து இருளப்ப பிள்ளை வகையறாவிடம் கிரையம் வாங்கினார்கள் என்றால் சரிதான்.

(9) நீதிமன்ற ஆணையர் இருமுறை தாவா இடத்தை பார்வையிட்டு, அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளார் என்றும், அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். 18.01.2021 ம் வருடம் நீதிமன்ற ஆணையர் முதல்முறை தாவா இடத்தை பார்வையிட்டு, தாக்கல் செய்துள்ள அறிக்கை மற்றும் வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள விவரங்கள் சரியா என்றால் சரியல்ல, ஆகையால் தான் இரண்டாவது முறை தாவா சொத்தை பார்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்தார். நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள முதல் அறிக்கை மற்றும் வரைபடத்தில் என்ன தவறுகள் உள்ளது என்றால் ஆணையர் பத்திரத்தை வாங்கவில்லை, பைப் இல்லை, தெருகுழாய் இல்லை, பெட்டிக்கடை இல்லை, இல்லாத சங்கதிகளை குறிப்பிட்டுள்ளதால் தவறு, இரண்டாவதாக தாக்கல் செய்துள்ள அறிக்கை மற்றும் வரைபடத்தில் மேற்படி சங்கதிகளை குறிப்பிடவில்லை.

(10) நீதிமன்ற ஆணையரை நியமிக்க வேண்டி வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவிற்கு எங்களது பத்திரங்கள் படி அளக்கவேண்டும் என்று குறிப்பிட்டு மறுப்புரை தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஞாபகம் இல்லை. எனது தரப்பு ஆவணங்களின் படி, தாவா சொத்தை அளந்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய நீதிமன்ற ஆணையருக்கு உத்தரவு எதுவும் இல்லை என்பது பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தில் நான் முதலில் பெட்டிக்கடை வைத்தேனா என்றால் இல்லை. நான் தாவா சொத்தில் 2012 ல் முதன் முதலில் பெட்டிக்கடையும் கல்தூணும் பொதுமக்கள் செல்லும் பொது பாதையில் வைத்து

இடையூறு செய்ததால் தான் வாதி தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

(11) தாவா சொத்தில் கழிவறையை எப்போது நான் அமைத்தேன் என்றால் 2012 ம் வருடம். நீதிமன்ற ஆணையர் இரண்டாவதாக தாக்கல் செய்துள்ள அறிக்கை மற்றும் வரைபடத்தில், வரைபடம் 1ல் என்னுடைய கிரையப்பத்திரத்தின் படி தாவா சொத்தை அளந்து வரைபடம் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி வரைபடம்-1ல் ABCD என்று எனது பத்திரத்தில் உள்ள தாவா 1வது லக்க சொத்தை ஆணையர் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். எனது பத்திரத்தில் உள்ள இரண்டாவது லக்க சொத்தை ஆணையர் வரைபடம் 1ல் AEFG என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். எனது பத்திரத்தில் உள்ள 3 வது லக்க சொத்தை ஆணையர் வரைபடம் 1ல் JKLM என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் 2வதாக தாக்கல் செய்துள்ள வரைபடம் 1ல் உள்ள அளவுகளுக்கும் வரைபடம் 2ல் உள்ள அளவுகளுக்கும் பெருத்த வேறுபாடுகள் உள்ளது என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது.

(12) எனது கிரைய பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள அளவுகளையும், நான்குமாலையும் அப்படியே ஆணையர் வரைபடம் 1ல் குறிப்பிட்டுவிட்டு, பூமியில் உள்ள அளவுகள் எதையும் அளக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள 2வது அறிக்கை மற்றும் வரைபடத்திலுள்ள, வரைபடம் 1ல் உள்ள அளவுகள் சரியா அல்லது வரைபடம் 2 ல் உள்ள அளவுகள் சரியா என்றால் அளவுகள் பற்றி எனக்கு தெரியாது. என்னுடைய பி.சா.ஆ.2 ஆவணப்படி 1வது லக்க சொத்தின் விஸ்தீரணம் கிழமேல் 82 அடி, தென்வடல் 46 அடியும் என்றால் சரிதான். 1வது லக்க சொத்தின் மேற்கு பகுதியை தான் தாவா வழக்கின் 2ம் வாதிக்கு கிரையம் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். 1வது லக்க சொத்தின் கிழக்கு பகுதி என் கைவசம் உள்ளதா என்றால் என் கைவசம் உள்ளது.

(13) ஆணையர் தாக்கல் செய்துள்ள வரைபடம் 2ல் 1வது லக்க சொத்தில் எனது கைவசம் உள்ள சொத்திற்கு கிழக்கே சந்து உள்ளதாக ஆணையர் குறிப்பிட்டுள்ளார் என்றும், மேற்படி சந்து யாருடையது என்றால் எனக்கு பாத்தியப்பட்ட சந்து. ஆணையர் தாக்கல் செய்துள்ள வரைபடம் 2ல் 1வது லக்க சொத்தில் சுமதிக்கு கிரையம் கொடுத்த இடம், எனது கைவசம் உள்ள இடம், அதற்கு

கிழக்கே உள்ள சந்து ஆகியவற்றை சேர்த்து கிழமேல் 77 அடி உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனது பத்திரத்தின் 1வது லக்க சொத்தின் தென்வடல் அடி 44 என்றால் சரிதான். ஆணையர் தாக்கல் செய்துள்ள வரைபடம் 2ல் தென்வடலாக எனது கைவசம் உள்ள இடத்தின் தென்வடல் அடி 6 மீட்டர் என்றும் அதாவது 19 அடி, தாவா சொத்தின் தென்வடல் அடி 4.2 மீட்டர் அதாவது 13 அடி ஆக மொத்தம் பூமியில் 1வது லக்க சொத்து என்பது தென்வடலாக 32 அடி தான் உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

(14) பி.சா.ஆ.1 ஆவணத்தில் 1வது லக்க சொத்தின் நான்குமாலில் 3வது லக்க சொத்திற்கும் எங்களுடைய பொது பாத்தியமான எங்கள் கிழமேல் நடைபாதைக்கும் வடக்கு என்று குறிப்பிட்டுள்ளது நீதிமன்ற ஆணையர் அவரது வரைபடம் 1ல் குறிப்பிட்டுள்ள கிழமேல் நடைபாதை தானா என்றால் இல்லை, நடைபாதை முழுமையாக இல்லை. பி.சா.ஆ.2 ஆவணத்தில் 2வது லக்க சொத்தானது கிழமேல் 72 அடி, தென்வடல் 26 அடி என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் வரைபடம் 2ல் சர்வே எண். 418/38 என்பது தான் எனது பி.சா.ஆ.2 பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள 2வது லக்க சொத்தா என்றால் ஆமாம். நீதிமன்ற ஆணையர் வரைபடம் 2ன் படி பத்திரத்தில் உள்ள 2வது லக்க சொத்து கிழமேல் அளவு 13.2 மீட்டர், தென்வடல் 5.2 மீட்டர் என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான், சாட்சி பின்பு சர்வே எண். 418/38 க்கு கிழக்கே உள்ள சர்வே எண். 418/18 ம் 2 வது லக்க சொத்தில் கட்டுப்படுகிறது என்கிறார்.

(15) நீதிமன்ற ஆணையர் வரைபடம் 2ன் படி தாவா 2வது லக்க சொத்தின் கிழமேல் அளவு 71 அடி, தென்வடல் 17 அடி உள்ளது என்றால் தென்வடல் 17 அடி என்பது வீடு மட்டும் உள்ளது. நீதிமன்ற ஆணையர் வரைபடம் 2ன் படி , 2 வது லக்க சொத்துடன் தாவா சொத்தையும் சேர்த்தால் தென்வடல் 30 அடி வருகிறது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. என்னுடைய பி.சா.ஆ.2 பத்திரத்தில் 2வது லக்க சொத்தின் நான்குமாலில் அழகர்சாமி சேர்வை கிரைய வீட்டிற்கும், கிழமேல் எங்கள் நடைபாதைக்கும் மேற்கே உள்ள இடத்தை தான் நாங்கள் கிரையம் வாங்கினோம் என்றால் சரிதான். நடைபாதை இடத்தையும் சேர்த்து தான் கிரையம் வாங்கியதாக என்னுடைய பி.சா.ஆ.2 பத்திரத்தில் சொல்லவில்லை என்றால் நடைபாதையும் சேர்த்து தான் நான் கிரையம் வாங்கினேன்.

(16) எனது பத்திரத்தில் உள்ள 1வது லக்க சொத்தில் தெற்கே உள்ள நடைபாதையில் எனக்கு உரிமை உள்ளது என்றால் சரிதான். எனது பத்திரத்தில் உள்ள 2 வது லக்க சொத்தில் குறிப்பிட்டுள்ள நடைபாதை தான் தாவா சொத்து என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய திருமணத்திற்கு 10 ஆண்டுகளுக்கு முன்பு பி.சா.ஆ.1 கிரையம் நடைபெற்றதால் தான் என்னால் சரியாக அளவுகளையும் நான்குமாலையும் சொல்ல இயலவில்லை என்றும், எனது மனைவியால் தான் மேற்படி பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள அளவுகளையும் நான்குமாலையும் சொல்ல முடியும் என்று சொன்னால் சரியல்ல. பி.சா.ஆ.3 பத்திரம் மூலமாக தாவா சொத்திற்கு தெற்கு பகுதியின் ஒரு பகுதியை சுமதிக்கு கிரையம் கொடுத்துள்ளோமா என்றால் கிரையம் கொடுக்கவில்லை , தாவா சொத்திற்கு தெற்கு பகுதி என் கைவசம் உள்ளது.

(17) என்னிடம் காண்பிக்கப்படும் பி.சா.ஆ.3 பத்திரம் எனது மனைவி சுமதிக்கு எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரத்தின் சான்றிட்ட நகல் என்றால் சாட்சி மேற்படி பத்திரத்தை பார்த்துவிட்டு சரிதான் என்று சாட்சியம் அளித்தார். மேற்படி பி.சா.ஆ.3 பத்திரத்தில் வடக்குமாலில், என் கைவசமுள்ள நிலத்துக்கும், கிழமேல் பாதைக்கும் தெற்கு, என்று குறிப்பிட்டுள்ளது, மேற்படி கிழமேல் பாதை தான் தாவா சொத்தா என்றால் இல்லை. என் கைவசமுள்ள நிலம் என்பது என்னுடைய பி.சா.ஆ. 2 ஆவணத்தில் உள்ள் 2 வது லக்க சொத்து என்றால் சரிதான். எனது மனைவி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில், 5 வது பாராவில் உள்ள சங்கதிகள் சரியா என்றால் சரிதான். பி.சா.ஆ. 3 பத்திரத்தில் வடக்குமாலில் சொல்லப்பட்டுள்ள கிழமேல் பாதை தான் தாவா சொத்து என்றால் சரியல்ல. எனது பி.சா.ஆ.3 பத்திரத்தில் கிழமேல் நடைபாதைக்கும் தெற்கு என்று குறிப்பிட்டுள்ளது நீதிமன்ற ஆணையர் வரைபடம் 2 ல் எங்கே என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று நீதிமன்ற ஆணையர் வரைபடம் 2 ஐ சாட்சியிடம் காண்பித்து கேட்டபோது, அளவுகள் குறிப்பிடாமல் பத்திரத்தை கொடுத்துள்ளேன், எனது இடத்தில் எனது வீட்டிற்கு ஓரமாக தான் செல்லமுடியும் என்று சாட்சி கோபத்துடன் குறுக்கு விசாரணை செய்யும் வழக்கறிஞரை பார்த்து பதில் அளித்தார், வரைபடம் 2 ல் பி.சா.ஆ.3 பத்திரத்தில் உள்ள நடைபாதை எங்கு உள்ளது என்று வரைபடம் 2 ஐ சாட்சியிடம் காண்பித்து கேட்டதற்கு சாட்சி அதனை அடையாளப்படுத்தி கூறாமல் தாவா சொத்து எங்கு உள்ளது என்ற கேட்ட கேள்விக்கு குறுக்கு விசாரணை செய்யும் வழக்கறிஞரை பதில் கேள்வி எழுப்பினார்.

(18) பி.சா.ஆ.3 பத்திரத்தில் கண்டுள்ள விவரங்கள் சரிதானா என்றால் சரி தான். நான்குமால்கள் சரியா என்றால் சரிதான். எனது மனைவி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் பாரா 5 ல் குறிப்பிட்டுள்ள விவரங்கள் சரிதானா என்றால் சரி தான். நாங்கள் 2 ம் வாதிக்கு எழுதிக்கொடுத்துள்ள பி.சா.ஆ.3 பத்திரத்தில் கிழமேல் நடைபாதை என்று ஒப்புக்கொண்டு தற்போது வாதிகள் உள்பட பொதுமக்கள் புழங்கி வரும் பொது நடைபாதையில் முதலில் பெட்டிகடை அமைத்தும், பின்பு கல்தூண்களை குறுக்கே போட்டு, கழிப்பறை அமைத்து இடையூறு செய்து வருகிறேன் என்றால் பொது நடைபாதை அல்ல. தாவா சொத்திற்கு வடக்கேயும் தெற்கேயும் காலிமனை இடமும் என்னுடைய வீடும், மற்றும் வாதியின் வீடும் உள்ளது என்றால் சரிதான். கிழக்கே தென்வடல் தெரு உள்ளதா என்றால் தெரு உள்ளது. தாவா சொத்திற்கு மேற்கு அரசுபுறம்போக்கு இடம் உள்ளதா என்றால் இல்லை, எனது பத்திரத்தில் உள்ள 2 வது லக்க சொத்து உள்ளது. தாவா சொத்திற்கு மையப்பகுதியில் மின்கம்பம் அமைக்கப்பட்டுள்ளதா என்றால் சரியல்ல, என்னுடைய இரண்டாவது லக்க சொத்திற்கு மேற்கே தான் மின்கம்பம் அமைக்கப்பட்டுள்ளது. 2 ம் வாதி சுமதி கிரையம் வாங்கிய நாளிலிருந்து தான் தாவா சொத்து வழியாக தான் நடந்து வருகிறார் என்றால் ஆமாம், சரிதான், பின்பு சாட்சி குறுக்கு விசாரணை செய்யும் வழக்கறிஞரை பார்த்து தாவா சொத்துன 2 வது லக்க சொத்து தானா என்று எதிர்கேள்வி கேட்டார். மேலே நான் குறிப்பிட்ட 2 வது லக்க சொத்து என்பது எதில் உள்ள இரண்டாவது லக்கம் சொத்து என்றால் எனது மனைவி கிரையம் வாங்கிய பி.சா.ஆ.2 ஆவணத்தில் உள்ள சொத்தை தான், நான் 2 வது லக்க சொத்தாக சொல்கிறேன்.

(19) தாவா சொத்தை கிழமேல் பாதை என்று ஒப்புக்கொண்டு, தற்போது பாதையில்லை என்று மறுப்பதற்கு எனக்கு உரிமையில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து என்பது வாகைகுளம் கிராம மக்கள் புழங்கி வரும் பொது ஜன தெரு என்றும், வழக்கிற்காக பொய்யாக எனக்கு பாத்தியப்பட்ட சொத்து என்று சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் முதலில் ஒரு பஞ்சாயத்து குடிநீர் குழாய் இருந்ததா என்றால் இல்லை. தாவா சொத்து பொது தெரு என்பதால் பஞ்சாயத்தில் குடிநீர் குழாய் அமைக்கப்பட்டது என்றும், அதனை பொதுமக்கள் புழங்கவிடாமல் என்னுடைய பணபலம், ஆள்பலத்தை வைத்து

இடையூறு செய்ததால் மேற்படி குழாயை வேறு இடத்திற்கு மாற்றப்பட்டது என்றால் சரியல்ல. வாகைகுளம் கிராமத்தில் அரியநாச்சியம்மன் என்ற ஒரு கோவில் உள்ளதா என்றால் உள்ளது. மேற்படி கோவில் திருவிழாவில் எனக்கு மூன்றாம் கரை மரியாதை கொடுக்க கேட்டபோது, அதனை பொதுமக்கள் மறுத்ததால், பொதுமக்கள் புழங்கி வரும் பொது பாதையை நான் ஆக்கிரமித்துள்ளேன் என்றால் சரியல்ல.

(20) அருப்புக்கோட்டை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 225/2012 ன் பிராது மற்றும் எதிர்வழக்குரையை நான் பி.சா.ஆ.4 மற்றும் பி.சா.ஆ.5 ஆக எதற்காக இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் தேர்தலில் ஏற்பட்ட விரோதத்தின் காரணமாக 2012ம் வருடம் 2 வழக்குகளும் தாக்கல் செய்யப்பட்டது என்பதற்கு ஆதரவாக தாக்கல் செய்துள்ளேன். தாவா வழக்கில் உள்ள 2ம் வாதியும், 3ம் வாதியும் ஓ.எஸ். 225/2012ல் தரப்பினர்களாக இல்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை நான் தான் கூறினேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் 4 வது பாராவில் என்ன குறிப்பிட்டுள்ளது என்றால் சாட்சி நிரூபண வாக்குமூலத்தில் உள்ள 4 வது பாராவை முழுமையாக படித்து பார்த்தார். எனது நிரூபண வாக்குமூலத்தில் உள்ள 4 வது பாராவில் நான் தான் தாவா சொத்து வழியாக தான் 2ம் வாதி நடந்து சென்று வருகிறார் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் தாவா சொத்தின் ஒரு பகுதியை தான் 2ம் வாதி புழங்கி வருகிறார். மேற்படி ஒரு பகுதியில் 2ம் வாதி அவருடைய வாகனங்களை நிறுத்தவோ, பொருட்களை வைக்கவோ உரிமை உள்ளதா என்றால் உரிமை இல்லை. ஏன் உரிமை இல்லை என்றால் அவருக்கு பாத்தியப்பட்ட 41, 44 அடிக்கு முழுமையாக அவர் வீடு கட்டிவிட்டார், எங்களுக்கு பாத்தியப்பட்ட இடத்தில் 2 அடிக்கு படிக்கட்டுக்கள், சன்சைடுகள் வைத்து ஆக்கிரமிப்பு செய்துள்ளார். சுமதிக்கு எழுதிக்கொடுத்த பி.சா.ஆ.3 பத்திரத்தில் கிழமேல் பாதைக்கு தெற்கே தான் 41, 44 அடிக்கு நான் இடத்தை கிரையம் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி கிரைய இடத்தில் முழுமையாக வீடு கட்டுவதற்கு 2ம் வாதிக்கு உரிமை உள்ளதா என்றால் உரிமை இருக்கிறது என்றால் அதற்காக 2 அடிக்கு சன்சைடுகள் மற்றும் படிக்கட்டுகள் அமைக்க உரிமை உள்ளதா என்று கோபமாக எதிர்கேள்வி கேட்டார் சாட்சி.

(21) நீதிமன்ற ஆணையர் முதன்முதலில் தாக்கல் செய்துள்ள வரைபடத்தில், தாவா சொத்தில் எங்களது வீட்டில் உள்ள படிக்கட்டுகள் மட்டும் தான் அமைந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார் என்றும், 2 ம் வாதியின் வீட்டு படிக்கட்டுக்கள் அமைந்ததாக குறிப்பிடவில்லை என்றால் முதலில் தாக்கல் செய்த ஆணையர் அறிக்கை சரியில்லாததால் தான் 2 வதாக நீதிமன்ற ஆணையர் சொத்தை பார்வையிட்டு, அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்தார், நீதிமன்ற ஆணையர் முதல் அறிக்கையில் எங்களது வீட்டில் படிக்கட்டுகள் தாவா சொத்தில் இருப்பதாக குறிப்பிட்டிருந்தால், அதற்கு நான் என்ன செய்யமுடியும் என்று கேள்வி கேட்டார்.

சாட்சி பலமுறை நீதிமன்றத்தால் எச்சரித்தும், அதனை பொருட்படுத்தாமல் குறுக்கு விசாரணைக்கு பதில் கூறாமல் எதிர்கேள்வி கேட்டு, வந்ததால் அவரது சாட்சியம் பிற்பகல் 2.00 மணி அளவில் நிறுத்திவைக்கப்பட்டது.

**<u>பிற்பகல் 2.50 க்கு சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு, சத்திய பிரமாணம் செய்யப்பட்டு, குறுக்கு விசாரணை தொடர்ச்சி-</u>**

(22) தாவா சொத்திற்கு கிழக்கு பக்கமும், மேற்கு புறமும் பிரதான சாலைக்கு செல்வதற்கு தாவா சொத்தை தவிர, தாவா சொத்திற்கு வடக்கு தெற்கே உள்ளவர்களுக்கு வேறு வழியில்லை என்றால் வழி உள்ளது. முதன் முறையாக நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிடும் வரும்போது என்னுடைய பத்திரங்கள் எதையும் நான் அவரிடம் காண்பிக்கவில்லை என்று அவரது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார் என்றால் பத்திரத்தை காண்பித்தேன், ஆனால் அதை அவர் பார்க்கவில்லை. பி.சா.ஆ.1 மற்றும் பி.சா.ஆ.2 பத்திரங்களில் தாவா சொத்து கட்டுப்படவில்லை என்றும் , மேற்படி பத்திரங்கள் மூலம் எனது மனைவி தாவா சொத்தை கிரையம் வாங்கவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து அரசு ஆவணங்களின் படியும் , எனது மனைவி 2 ம் வாதிக்கு எழுதிக்கொடுத்த பத்திரத்தின் படியும், எங்களது பத்திரத்தின் படியும், பொது பாதை என்று தான் சொல்லப்பட்டுள்ளது என்றால் 1991 ம் வருடம் தான் பாதை என்று வகைப்பாடு செய்யபட்டுள்ளது. அரசு ஆவணங்களின் படி, தாவா சொத்து பாதை என்று வகைப்பாடு செய்யப்பட்டுள்ளதால் அதனை ஆட்சேபித்து வழக்கு ஏதேனும் நான் தாக்கல் செய்தேனா என்றால் இவ்வழக்கு நிலுவையில் உள்ளதால் நான் வேறு எந்த வழக்கையும் தாக்கல்

செய்யவில்லை. தாவா சொத்தில் எனக்கு எவ்வித தனிப்பட்ட பாத்தியமும் இல்லை என்றும், தாவா சொத்து வாகைகுளம் கிராமமக்கள் புழங்குவதற்கான பொது நடைபாதை என்றும், ஆகையால் தாவா சொத்தில் ஏற்பட்டுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு நான் கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.